புதுச்சேரி அரசு
போக்குவரத்துத் துறை
***

No.4/TD/DTC/PA/2014/32

புதுச்சேரி, தேதி: 18.12.2014

செய்திக் குறிப்பு

**பழகுநர் மற்றும் ஓட்டுநர் உரிமம் உள்ளிட்ட விபரங்கள் போக்குவரத்துத் துறை வலைதளத்தில் கிடைக்கிறது**

போக்குவரத்துத் துறை பொது மக்களுக்கான பழகுனர் உரிமம், ஓட்டுனர் உரிமம், வாகன பெயர் மாற்றம் உட்பட பல்வேறு சேவைகள் வழங்கி வருகிறது.

போக்குவரத்துத் துறையில் தமக்குறிய பழகுனர் உரிமம்/ஓட்டுனார் உரிமம் தயாராக உள்ளதா? உரிய ஆவணங்களுடன் வாகன பெயர் மாற்றம் நிறைவு பெற்றுவிட்டதா? என்பன போன்ற விபரங்களை உடனடியாக அறிந்து கொள்ள முடியாத பொதுமக்கள் தமக்கான சேவைகளை இடைத்தரகர் மூலம் எளிதாக பெறமுடியும் என்று நம்பும் தவறான சூழல் நிலவுகிறது. இதனைப் போக்கும் வகையில் பொதுமக்களுக்கான சேவைகள் உடனடியாகச் சென்று சேர்வதற்கு போக்குவரத்துத் துறை பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

போக்குவரத்துத் துறையின் துரித நடவடிக்கையின் ஓர் அங்கமாக, பழகுனர் உரிமம் பெறுவதற்கான தேர்வு மற்றும் ஓட்டுனர் உரிமம் பெறுவதற்கான தேர்வு நடைபெற்ற மறுநாளே அதில் வெற்றி பெற்றவர்கள் அனைவருக்கும் பழகுனர் உரிமம் மற்றும் ஓட்டுநர் உரிமம் தயார் செய்து பொதுமக்களுக்கு வழங்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பழகுநர் உரிமம் மற்றும் ஓட்டுநர் உரிமம் பெறுவதற்காக நடைபெறும் தேர்வுக்கு மறுநாள் தமது உரிமம் தயாராக உள்ளதா என்பதை புதுச்சேரி போக்குவரத்துத் துறை வலைதளம் மூலம் அறிந்து கொண்டு போக்குவரத்துத் துறை அலுவலகத்திற்கு நேரில் வந்து தமது பழகுநர் உரிமம் மற்றும் ஓட்டுநர் உரிமத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

கடந்த 22.09.2014 முதல் போக்குவரத்துத் துறை அலுவலகத்தில், தேதி வாரியாக தயாராக உள்ள பழகுநர் உரிமம், ஓட்டுநர் உரிமம் ஆகிய விபரங்களை புதுச்சேரி போக்குவரத்துத் துறையின் வலைதள முகவரியில் www.transport.puducherry.gov.in மூலம் அறிந்து, அனைத்து பொதுமக்களும் பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

GOVT OF PONDICHERRY
TRANSPORT DEPARTMENT

(எஸ்.டி.சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்